# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா. | 1 | நாள் | : 14.11.2024 |
| அசல் வழக்கு எண். | 8/2024 | | |
| பெயர் | கோபாலக்கிருஷ்ணன் | த/பெ | சக்கரவர்த்தி |
| வயது | 49 | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | மயிலாடுதுறை | தாலூக்கா | மயிலாடுதுறை |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழிசெய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் 3ம் பிரதிவாதி ஆவேன். முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவைதான்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

என் தாயார் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி. நான் இந்த வழக்கில் 3ம் பிரதிவாதி என்றால் சரி. நான் 2004 ல் புருனே நாட்டிற்கு வேலைக்கு போனேன். 2012 வரை நான் வெளிநாட்டில் தான் வேலை பார்த்தேன் என்றால் சரி. நான் வெளிநாடு போய் வேலை செய்து சம்பாதித்த பணத்தை என் தாயாருக்கும் ஜெயக்குமாருக்கும் (1ம் பிரதிவாதி) அனுப்பி வைத்தேன் என்றால் சரி. என் தகப்பனார் 1996 ல் இறந்தார். என் அப்பா இறந்தபின் என் அம்மாவும் ஜெயக்குமாரும் குடும்பத்தை கவனித்தார்கள் என்றால் சரி. நாங்கள் கூட்டுக்குடும்பமாக இருந்தோம். என் அப்பா உயிருடன் இருக்கும்போது கொற்கையில் உள்ள சொத்தை விற்று அந்த பணத்தை வைத்து கச்சேரி ரோட்டில் உள்ள 13 கடைகள் மேலே உள்ள இரண்டு வீடுகள் கட்டப்பட்டது என்றால் சரி. முதலில் ஒரு கடை தான் கட்டினோம் அதன்பிறகு கொஞ்சம் கொஞ்சமாக கடைகளும் வீடுகளும் கட்டினோம். என் அப்பா இருக்கும்போதே கச்சேரி ரோட்டில் உள்ள கட்டிடங்கள் கட்ட ஜெயக்குமார் மூத்த பிள்ளை என்பதால் அவர் பெயரில் approval பெறப்பட்டது என்றால் அவர் படித்திருப்பதால் அவர் பெயரில் approval பெறப்பட்டது. மயிலாடுதுறை வெள்ளாந்தெருவில் உள்ள சொத்து பூர்வீக பொதுக்குடும்ப சொத்தை விற்கு வாங்கப்பட்டது என்றால் சரியல்ல.

நானும் பிரகாஷ்ம் வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பினோம். ஒரு கடையை தவிர 12 கடையை வாடகைக்கு விட்டோம் அதிலிருந்து வந்த வருமானத்தை வைத்தும் நாங்கள் அனுப்பிய பணத்தை வைத்தும் அந்த சொத்தை கிரயம் வாங்கினோம். தாவா 2ம் ஐட்ட சொத்து என் அண்ணன் ஜெயக்குமார் பெயரில் உள்ளது என்றாலும் ஆனால் பொதுக்குடும்ப வருமானத்தை வைத்து கிரயம் பெறப்பட்டது என்றால் சரி. தாவா 3ம் ஐட்ட சொத்து ஜெயக்குமாரின் மனைவி ராஜராஜேஸ்வரி பெயரில் உள்ளது என்றாலும் அதுவும் பொதுக்குடும்ப வருமானத்திலிருந்து கிரயம் பெறப்பட்டது என்றால் சரி. என் அண்ணன் மனைவி ராஜராஜேஸ்வரிக்கு சொத்து வாங்குவதற்கோ கடை கட்டுவதற்கோ வருமானம் இல்லை என்றால் சரி. அவரை திருமணம் செய்யும்போது அவர் அப்பா இல்லை அவரது பெரியப்பாதான் திருமணம் செய்து வைத்தார். தாவா 4 ம் ஐட்ட சொத்து அருள்மிகு சுந்தரேஸ்வரர் சாமி கோவிலுக்கு சொந்தமானது என்றால் சரி. அந்த நிலத்தை குத்தகைக்கு எடுத்தது பொது குடும்ப வருமானத்திலிருந்து என்றால் ஆமாம். சிதம்பரத்தில் ஒரு வீடு உள்ளது என்றால் சரி. அந்த வீடு என் அண்ணன் ஜெயக்குமாரின் மனைவி ராஜராஜேஸ்வரி பெயரில் உள்ளது. நான் வெளிநாட்டில் இருந்தபோது 2005ம் வருடம் தாவா 1ம் ஐட்ட சொத்தை அடமானம் வைத்து கடன் பெற என் அண்ணன் ஜெயக்குமாருக்கு பவர் பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரி. அவர் பிஸ்னஸ்க்கு பணம் வேண்டுமென்று கேட்டதால் எழுதிக்கொடுத்தேன். நான் கொடுத்த பவர் பத்திரத்தின் அடிப்படையில் மயிலாடுதுறை ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவில் அடமானக்கடன் 4 லட்சம் ரூபாய் ஜெயக்குமார் வாங்கினார் என்றால் சரி. அந்த கடனை கட்டிவிட்டோம். பத்திரத்தை வங்கியிலிருந்து திருப்பி கொடுக்கவில்லை. ஜெயக்குமார் அந்த பத்திரத்தின்பேரில் மீண்டும் கடன் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி 4 லட்சம் ரூபாயை வைத்தும் பொதுக்குடும்ப வருமானத்தை வைத்தும் மணக்குடியில் உள்ள வீடு சிதம்பர்தில் உள்ள வீடு வாங்கப்பட்டது என்றால் சரி. திருக்கடையூரிலும் ஒரு இடம் வாங்கினோம். என் அண்ணன் ஜெயக்குமாருக்கென்று தனிப்பட்ட வருமானம் இல்லை என்றால் சரி. என் அப்பாவின் கடையை அவர் பார்த்துக்கொண்டார். தாவா 6ம் ஐட்ட சொத்தை என் அப்பா உயிருடன் இருக்கும்போதே விற்றுதான் கச்சேரி ரோட்டில் சின்ன சின்னதாக கடை கட்டினோம். தாவா 7ம் ஐட்ட

சொத்து பிரகாஷ் உடையதா என்றால் ஆமாம். அவர் 30.07.1998 ல் பொதுக்குடும்ப சொத்தை பொறுத்து விடுதலை பத்திரம் கொடுத்துவிட்டார் என்றால் அப்படிதான் சொல்கிறார்கள் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா 7 ம் ஐட்ட சொத்து 2 ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றாலும், மற்ற பொது குடும்ப சொத்துக்கள் குறித்து அவர் விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டதால் அவருக்கு தாவா சொத்தில் பாகம் கோர அவருக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரி. கச்சேரி ரோட்டில் உள்ள சொத்து SBI வங்கியில் அடமானத்தில் உள்ளது என்றாலும் பத்திரம் திரும்ப வாங்கவில்லை என்றால் சரி. நான் வெளிநாட்டில் இருந்து வந்த பிறகு வாடகை வண்டிக்கு டிரைவர் வேலை செய்து வருகிறேன். அந்த வருமானத்தை என்னுடைய தனிப்பட்ட வருமானமாக வைத்திருக்கிறேனா என்றால் ஆமாம். தாவா 7 ம் ஐட்ட சொத்து 2 ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றாலும் தாவா மற்ற ஐட்ட சொத்துகளில் அவருக்கு பாகம் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் வாதிகள் கோரிய படி பாகப்பிரிவினை பரிகாரத்திற்கு தீர்ப்பாக வேண்டுமென்றால் சரி. அதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரி.